தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டு மூன்று
# தமிழ் அறிவுப்போட்டி 2020

## Year 3

## Tamil Language Skills Competition 2020

# தமிழ் அறிவுப்போட்டி – 2020

## ஆண்டு - 3

**ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்**

இதில் மூன்று சுற்றுக்கள் உள்ளன.

## இப்போட்டியில் கேள்விகள் அனைத்தும் ஆசிரியரால் வாசிக்கப்படும்

ஆசிரியர் கேள்வியை வாசித்து முடிக்கமுன் மாணவர் விடையளிக்க முயன்றால்

கேள்வி மறைக்கப்படுவதுடன், வாசிப்பதும் நிறுத்தப்படும்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு, அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டு 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

# முதல் சுற்று 10 கேள்விகள்

1.

பறக்காத பறவை எது?

- வாத்து
- கோழி
- பென்குயின்
- கூக்கப்பற

Year 3 - 2020

விடை:

பென்குயின்

2.

கூதிர் காலத்தை வேறு எப்படி அழைக்கலாம்?

- இலையுதிர் காலம்
- கோடைகாலம்
- இலைதளிர் காலம்
- மாரிகாலம்

2. விடை:

மாரிகாலம்

3. ஐம்பொறிகள் யாவை?

3. விடை:

கண்

காது

மூக்கு

வாய்

உடல்

4. ஐம்புலன்கள் எவை?

4. விடை:

சுவை

ஒளி

ஊறு

ஓசை

நாற்றம்

(சுவைத்தல், பார்த்தல், தொடுதல், கேட்டல், முகர்தல்)

5.

தமிழ் மொழி வாழ்த்தை இயற்றியவர் யார்?

- பாரதியார்
- கம்பர்
- திருவள்ளுவர்
- பாரதிதாசன்

5. விடை:

பாரதியார்

6. முத்தமிழ் எவை?

6. விடை:

இயல்

இசை

நாடகம்

7. திருக்குறளில் உள்ள மூன்று பிரிவுகள் எவை?

7. விடை:

அறம்

பொருள்

இன்பம்

8.

தமிழர் விளையாட்டுக்கள் அல்லாதது எது?

- கெந்தியடி
- கண்ணாம்பூச்சி
- துடுப்பாட்டம்
- போர்த்தேங்காய் அடி

8. விடை:

துடுப்பாட்டம்

9. விமானம் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்?

# 9.

9. விடை:

விமானி

10. ஆத்திசூடியை எழுதியவர் யார்?

10.

10. விடை:

ஔவையார்

முதல் சுற்று முடிவடைந்தது

இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

11. எதிர்ச் சொல் தருக:

இரவு

Year 3 - 2020

11. விடை:

பகல்

12. சிலப்பதிகாரத்தின் கதாநாயகன் யார்?

12. விடை:

கோவலன்

13.

பைபிளுக்கு அடுத்ததாக பல மொழிகளில் மொழி பெயர்கப்பட்ட தமிழ் நூல் எது?

- கம்பராமாயணம்
- சிலப்பதிகாரம்
- திருக்குறள்
- ஆத்திசூடி

13. விடை:

திருக்குறள்

14.

தமிழ் வருடப்பிறப்பு எந்த மாதத்தில் வரும்?

14. விடை:

சித்திரை

15. வசனமாக ஒழுங்கமைத்து கூறுக

தமிழ்ப் / பாரதியார் / ஒரு / புலவர்

15. விடை:

பாரதியார் ஒரு தமிழ்ப் புலவர்

16.

கண்ணகியின் கோபத்தால் எந்த நகரம் எரிந்தது?

- யாழ்பாணம்
- திருநெல்வேலி
- மதுரை
- இராமேஸ்வரம்

16. விடை:

மதுரை

17. எதிர்ச் சொல் தருக:

மகிழ்ச்சி

17. விடை:

துக்கம் (கவலை)

18. **ஆண்பால்:**

ஆண் என்றால், அவன்

**பெண்பால்:**

பெண் என்றால் என்ன?

18. விடை:

அவள்

19. என் அப்பாவின் அண்ணன் எனக்கு என்ன உறவு?

19. விடை:

பெரியப்பா

20. கவிச்சக்கரவர்த்தி யார்?

20. விடை:

கம்பர்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று 10 கேள்விகள்

21. உப்பு உவர்க்கும் அதுபோல

மிளகாய் ______________________

21. விடை:

உறைக்கும்

22.

கோடை காலத்தை வேறு எப்படி அழைக்கலாம்?

- கூதிர்காலம்
- இளவேனிற்காலம்
- இலையுதிர் காலம்
- முதுவேனிற்காலம்

22. விடை:

முதுவேனிற்காலம்

23. எதிர்ச் சொல் தருக:

மேடு

23. விடை:

பள்ளம்

24. குயில் கூவும். அதுபோல
மயில் என்ன செய்யும்?

24. விடை:

அகவும்

25. எதிர்ச் சொல் தருக:

வீரன்

25. விடை:

கோழை

26. குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

| | | |
|---|---|---|
| த | வு | க |

26. விடை:

கதவு

27. எதிர்ச் சொல் தருக:

ஏழை

27. விடை:

பணக்காரன்

28. ஐம்பெரும் காப்பியங்களில் இரண்டைக் கூறுக?

28. விடை:

சிலப்பதிகாரம்

மணிமேகலை

வளையாபதி

குண்டலகேசி

சீவகசிந்தாமணி

(இரண்டு சரியான விடைகளை எதிர்பார்க்கின்றோம்)

29. என் அப்பாவின் தங்கையின் கணவன் எனக்கு என்ன உறவு?

29. விடை:

மாமா

30.

இவர் பாடசாலையில் கல்வி கற்பிப்பவர்.

இவர் யார்?

30. விடை:

ஆசிரியர்

# மூன்றாம் சுற்று முடிவடைந்தது

# அரை இறுதிப் போட்டி

# 15 கேள்விகள்

1.

இக்குறளை முடிக்கவும்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

______________________________

1. விடை:

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக

2.

இக்குறளை முடிக்கவும்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

________________________________________

2. விடை:

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று

3.

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்

______________________________

3. விடை:

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

4\.

பின்வருவனவற்றில் ஒன்று வேறு படுகின்றது. அது எது?

பச்சை

நீலம்

மஞ்சள்

சிவப்பு

கதிரை

4. விடை:

கதிரை

5.

அவுஸ்திரேலியாவில் உள்ள பருவகாலங்கள் எத்தனை?

- 1
- 2
- 4
- 5

5. விடை:

4

6.

தென்னையின் இளையது கன்று. அதுபோல வாழையின் இளையது என்ன?

6. விடை:

குட்டி

7.

தமிழ்மறை என்று எந்த நூலைக் குறிப்பிடுவர்?

7. விடை:

திருக்குறள்

(முப்பாநூல்)

8.

“சந்திரன்” இதற்கு வேறு சொல் தருக.

8. விடை:

மதி / நிலா / திங்கள்

9.

பின்வருவனவற்றுள் ஒன்று வேறுபடுகிறது. அது எது?

- வேட்டி
- சேலை
- பாவாடை
- மணிக்கூடு

9. விடை:

மணிக்கூடு

10.

யாருக்கு நன்றி தெரிவிப்பதற்காக தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது?

10. விடை:

சூரியனுக்கு

11.

எதிர்ச் சொல் தருக:

மெய்

Year 3 - 2020

11. விடை:

பொய்

12.

நாய் குலைக்கும்.

யானை ___________ .

1. பிளிரும்
2. கனைக்கும்
3. அழும்
4. சிரிக்கும்

12. விடை:

1. பிளிரும்

13.

இது காய்கறி வெட்ட உதவும்.
அது எது?

1. கத்தி
2. சட்டி
3. அடுப்பு
4. பானை

13. விடை:

கத்தி

14.

ஒருவரைப் பாராட்டி நடாத்தும் விழா என்ன?

14. விடை:

பாராட்டுவிழா

15.

“பள்ளிக்கூடம்”

இதற்கு வேறு சொல் தருக.

15. விடை:

பாடசாலை

கல்லூரி

அரை இறுதிப் போட்டி நிறைவுற்றது.

# இறுதிப் போட்டி

# 15 கேள்விகள்

1.

பசுவின் இளையது கன்று. அதுபோல ஆட்டின் இளையது என்ன?

1. விடை

குட்டி

2.

கடிதங்களை வீடுவீடாகச் சென்று கொடுப்பவர் யார்?

2. விடை

தபாற்காரர்

3.

ஆத்திசூடியை எழுதியவர் யார்?

3. விடை

ஔவையார்

4.

ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் இருக்கின்றன?

4. விடை

12 மாதங்கள்

5.

இவர் கட்டிடங்களைக் காவல் செய்பவர்.

இவர் யார்?

5. விடை

காவல்காரர்

6.

கப்பல்கள் நிற்கும் இடத்தை எப்படி அழைப்பர்?

6. விடை

துறைமுகம்

7.

**இதில் ஒன்று வேறுபட்டது. அது என்ன?**

1. தைப்பொங்கல் பண்டிகை
2. தீபாவளிப் பண்டிகை
3. பிறந்தநாள் விழா

7. விடை

பிறந்தநாள் விழா

8.

நான் ஒரு பறவை.
நான் தோகை விரித்து ஆடுவேன்.
நான் யார்?

8. விடை

மயில்

9.

பின்வரும் சொல்லினுள் இன்னுமொரு சொல் இருக்கிறது. அது கிழமையைக் குறிக்கும். அது எது?

**ஆரவாரம்**

9. விடை

வாரம்

10.

விமானி என்பவர் யார்?

10. விடை

விமானம் ஓட்டுபவர்

11.

சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

11. விடை

இளங்கோ
(இளங்கோ அடிகள்)

12.

திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன?

12. விடை

1330

13.

**வசனமாக ஒழுங்குபடுத்தி கூறுக:**

அழகாக

புதிய

இருக்கிறது

பட்டுப்

எனது

பாவாடை

**13. விடை:**

எனது புதிய பட்டுப் பாவாடை அழகாக இருக்கிறது

14.

மெய் எழுத்துக்கள் எத்தனை?

14. விடை:

18

15.

குதிரையில் சவாரி செய்யலாம்.
நீச்சல் குளத்தில் என்ன செய்யலாம்?

15. விடை:

நீந்தலாம்

இறுதிப்போட்டி நிறைவுபெற்றது

நன்றி

மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால் ..................

1\.

முடியுடை மூவேந்தர்கள் எனப்படுவோர் யார்?

1. விடை:

சேர, சோழ, பாண்டியர்

2.

தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் கொண்டாடப்படும் விழா எது?

2. விடை:

மாட்டுப் பொங்கல்

3.

வீட்டில் சமையல் செய்யும் அறையை எப்படி அழைப்பீர்?

3. விடை:

சமையலறை